# Deposition of Witness

In the Court of the Principal District Judge, Vellore District.
S.C.No. 89 of 2025
Prosecution Witness No.P.W.2 (L.W.8)

| | |
|---|---|
| Name | மருத்துவர் திரு.அ.பரத் |
| Father/Husband Name | ஆழ்வார்சாமி |
| Calling/Occupation | மருத்துவர் |
| Age | 39 |
| Address | சிஎம்சி மருத்துவமனை, வேலூர். |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 13.02.2026.

(A1 to A3 Present)

**முதல் விசாரணை**

நான் தற்போது சிஎம்சி மருத்துவமனையில் முதுகுத்தண்டு அறுவை சிகிச்சை பிரிவில் பயிற்சி மருத்துவராக பணியாற்றி வருகிறேன். இதற்கு முன்னர் நான் வேலூர் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் பணியாற்றியபோது கடந்த 26.05.2023 அன்று அதிகாலை 03.15 மணி அளவில் செல்வகுமார் என்பவரை கார்த்தி என்பரால் அழைத்து வரப்பட்டவரை விசாரித்தபோது பத்து தெரியாத நபர்கள் கத்தியால் அன்று இரவு 02.45 மணி அளவில் சந்தக்கோட்டை

டோல் பிளாசா அருகில் தாக்கியதாக சொன்னவரை பரிசோதனை செய்தபோது அவருக்கு கீழ்க்கண்ட காயங்கள் காணப்பட்டது.

காயம் எண். 1– வலது மார்பு பகுதியில் 1X 0.5X 0.5 செ.மீ அளவில் வெட்டுகாயம் காணப்பட்டது.

காயம் எண்.2– அதே வலது மார்பு பகுதியில் 2X0.5X0.5 செ.மீ அளவில் மற்றொரு வெட்டுகாயம் காணப்பட்டது.

காயம் எண் 3 – இடது வயிற்று பகுதியில் 1 X2X1 செ.மீ வெட்டுக்காயம் காணப்பட்டது.

காயம் எண் 4– இடது கைப்பகுதியில் 1X0.5X0.2 செ.மீ அளவில் வெட்டுக்காயம்.

காயம் எண் 5– அதே இடது கைப்பகுதியில் 2X1X0.5 செ.மீ அளவில் ஒரு வெட்டுக்காயம்.

காயம் எண் 6– இடது தலைப்பகுதியில் 5X4 அளவில் ஒரு வீக்கம்.

காயம் எண் 7–வலது முட்டி பகுதியில் 2X1 செ.மீ அளவில் ஒரு சிராய்ப்புக்காயம்.

காயம் எண் 8– வலது மார்பு பகுதியில் 1X0.3X0.3 செ.மீ அளவில் வெட்டுக்காயம் இருந்தன.

அவருக்கு முதல் உதவி சிகிச்சை அளிக்கப்பட்டு உள்நோயாளியாக அனுமதிக்கப்பட்டு X–ray மற்றும் சி.டி ஸ்கேன் எடுக்கப்பட்ட சிகிச்சை அளிக்கப்பட்டது. அவருக்கு ஏற்பட்ட

மேற்கண்ட காயங்களில் வயிற்று பகுதியில் எடுக்கப்பட்ட சி.டி.ஸ்கேனில் காற்று அடைந்திருந்தது மற்றும் நுரையீரல் பகுதியில் எடுத்த சி.டிஸ்கேனில் நுரையீரலை சுற்றியுள்ள தசைப்பகுதியில் காற்று அடைந்திருந்தது.

அவருக்கு சுவாசத்திற்கு தேவையான தசை (Diaphragm) அதில் ஓட்டை ஏற்பட்டிருந்தது. அவசர ரீதியில் அவருக்கு வயிற்று பகுதியை திறந்து அறுவை சிகிச்சை செய்யப்பட்டு அந்த ஓட்டை சரி செய்யப்பட்டது. அந்த காயத்தை பொருத்தவரையில் ஒரு கொடுங்காயமாகும். அதேபோன்று நெஞ்சுப்பகுதியில் காற்று அடைப்பு ஏற்பட்டது. அதுவும் கொடுங்காயம்தான். மேலே சொன்ன காயங்கள் மேலே சொன்ன ஆயுதத்தால் தாக்கினால் ஏற்பட வாய்ப்புண்டு.

அதே சம்பவத்தில் காயம்பட்ட மற்றொரு நபரான குமரன் என்பவரை அவருடைய சகோதரர் கஜேந்திரன் என்பவரால்அழைத்து வரப்பட்டவரை விசாரித்தபோது அவரையும் அதே இடத்தில் அதே தெரியாது பத்து நபர்கள் கத்தியால் தாக்கியதாக சொன்னவரை பரிசோதித்தபோது அவருக்கு கீழ்க்கண்ட காயங்கள் காணப்பட்டது.

**காயம் எண் 1–** இடது வயிற்று பகுதியில் 1X0.3X0.3 செ.மீ அளவில்ஒரு வெட்டுக்காயம்.

**காயம் எண் 2–** தலைப்பகுதியில் 0.3X0.2X0.2 செ.மீ அளவில் ஒரு வெட்டுக்காயம் காணப்பட்டது.

அவரை உள்நோயாளியாக அனுமதித்து அவருக்கு சிகிச்சை அளிக்கப்பட்டது. அவர் மருத்துவ ஆலோசனைக்கு எதிராக வெளியில் சென்றுவிட்டதால் அவருக்கு மேற்கொண்டு சிகிச்சை அளிக்கமுடியவில்லை. அதனால் அவருக்கு ஏற்பட்ட காயங்கள் கொடுங்காயமா அல்லது சொற்ப காயமா என்று சொல்ல முடியவில்லை. மேலே சொன்ன காயங்கள் மேலே சொன்ன ஆயுதத்தால் தாக்கினால் ஏற்பட வாய்ப்புண்டு.

**செல்வகுமார் என்பவரின் விபத்து பதிவேடு மற்றும் X-ray report and Medical Officer Opinion அ.த.சா.ஆ.2.**

**குமரன் என்பவரின் விபத்து பதிவேடு அ.த.சா.ஆ.3.**

என்னை போலீசார் விசாரணை செய்தார்கள். என்னிடம் காண்பிக்கப்படும் சா.பொ.1 ஆல் தாக்கினால் மேற்சொன்ன காயங்கள் ஏற்பட வாய்ப்புள்ளது.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

சா.பொ.1 கத்தியை முதன்முதலாக நான் நீதிமன்றத்தில்தான் பார்க்கிறேன் என்றால் சரிதான். சா.பொ.1-ஐ காட்டி போலீசார் என்னை விசாரிக்கவில்லை. தெரியாத பத்து நபர்கள் கத்தியால் தாக்கியதாக சொன்னதாகத்தான் விபத்து பதிவேட்டில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த பத்து நபர்களில் எத்தனை நபர்கள் கத்தியை பயன்படுத்தினார்கள் என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான்.

மேற்சொன்ன காயங்கள் அனைத்தும் இந்த ஒரே கத்தியால்தான் ஏற்பட்டது என்று சொல்லவில்லை என்றால் சரிதான். செல்வகுமாருக்கு ஏற்பட்ட காயங்கள் ஆழமான காயங்கள் இல்லை என்றும் மேலோட்டமான வெட்டுக்காயங்கள்தான் என்றால் ஒரு சில இடங்களில் ஆழமான காயங்களும் காணப்பட்டன. மனித தோல் மற்றும் கொழுப்பு பகுதி சேர்ந்தது 1 செ.மீ அளவில் இருக்குமா என்றால் 0.5 செ.மீ. முதல் 1 செ.மீ அளவில் இருக்கும். ஆனால் எல்லா இடங்களிலும் இதே அளவில் இருக்காது. இரண்டு நபர்கள் இருசக்கர வாகனத்தில் வேகமாக வந்து தவறி பேரிகார்டு மீது விழுந்தால் மேற்சொன்ன காயங்கள் ஏற்பட வாய்ப்புள்ளதா என்றால் இல்லை.

**மறுவிசாரணை – இல்லை.**

ELAVARASAN Digitally signed by ELAVARASAN Date: 2026.02.13 16:39:08 +0530

# Deposition of Witness

In the Court of the Principal District Judge, Vellore District.
S.C.No. 89 of 2025
Prosecution Witness No.P.W.3 (L.W.2)

| | |
|---|---|
| Name | செல்வகுமார் |
| Father/Husband Name | கண்ணன் |
| Calling/Occupation | பழக்கடை |
| Age | 43 |
| Address | வேலூர். |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 13.02.2026.

(A1 to A3 Present)

**முதல் விசாரணை**

நான் வேலூரில் வசித்து வருகிறேன். நான் இந்த வழக்கின் சம்பவ காலத்தில் வல்லாம் போர்ட்ட பிளாசா அருகில் ராகவேந்திரா புரூட் ஜூஸ் கடை நடத்தி வந்தேன். அதில் ஏழுமலை, கார்த்தி, குமரன், மாயி, தாஸ், மற்றொரு கார்த்தி ஆகியோர்கள் கடையில் அங்கேயே தங்கி வேலை செய்து வந்தார்கள். ஆஜர் எதிரிகளை தெரியும். சுமார் 3 ஆண்டுகளுக்கு முன்பு ஒருநாள் 2023 அன்று 5ம் மாதம், 25ம் நாள் இரவு 12.00 மணிக்கு மேல் கடையிடம் தகராறு செய்துக்கொண்டிருந்தார்கள்.

நான் விலக்கி விட்டு அனுப்பி வைத்தேன். பின்னர் மீண்டும் இரவு சுமார் 02.45 மணிக்கு மீண்டும் வந்து எதிரிகள் என் கடையிடம் வந்து குமரனிடம் சண்டை போட்டார்கள். நான் வெளியில் வந்து தடுத்தபோது சாட்சி 1ம் எதிரியை அடையாளம் காண்பித்து (கோபி கார்த்தி) என்னை அசிங்கமாக திட்டி பழக்கடையில் இருந்த கத்தியை எடுத்து மார்பில் மூன்று இடங்களில் குத்தி நீ செத்துவிடு என்று அசிங்கம் அசிங்கமாக திட்டினார்.

மேலும், மற்ற இரண்டு எதிரிகள் கடையில் இருந்த பொருட்களை உடைத்து கடையில் வேலை செய்த மற்றவர்களை அடித்தார்கள். கடையில் வேலை செய்த குமரனையும் அடித்துவிட்டார்கள். எனக்கு வயிற்றில் அறுவை சிகிச்சை செய்தார்கள். சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சட்டையை கழட்டி காண்பித்து அவரின் தோள்பட்டை, இடுப்பு, வலது மார்பு ஆகிய இடங்களில் இடப்பட்ட வெட்டுகாயங்களை காண்பித்தார். மேலும் மார்பிலிருந்து அடி வயிறு வரை அறுவை சிகிச்சை செய்யப்பட்டதற்கான அடையாளத்தையும் காண்பித்தார்.

எதிரிகள் மூவரும் கடையை அடித்து உடைத்தார்கள். அதன் பின்னர் எதிரிகள் எப்போது சென்றார்கள் என்று தெரியவில்லை. ஆம்புலன்ஸ் வரவழைத்து என்னை ஆம்புலன்ஸ் மூலம் அடுக்கம்பாறை அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றார்கள்.

என்னிடம் காண்பிக்கப்படும் கத்தியால்தான் எதிரிகள் என்னை தாக்கினார்கள். அந்த கத்தி என் கடையில் இருந்த பழம் வெட்டும் கத்தியாகும். போலீசார் நான் மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்தபோது என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

போலீசார் என்னை எத்தனை மணிக்கு விசாரித்தனர் என்றால் பகல் 01.00 மணிக்கு மேல் இருக்கும். மருத்துவமனையில் இருந்ததால் நேரத்தை எல்லாம் சரியாக கவனிக்கவில்லை. அதற்கு பின்னர் போலீசார் என்னை விசாரித்தார்களா என்றால் இல்லை. என்னை போலீசார் விசாரித்தபோது சா.பொ.1 கத்தியை என்னிடம் காட்டி விசாரித்தார்களா என்றால் ஆமாம்.

ஆஜர் எதிரிகளை முதன்முதலில் இப்போதுதான் நீதிமன்றத்தில் பார்க்கிறேன் என்றால் இல்லை சம்பவத்தன்றே பார்த்தேன். நான் அடிப்பட்டு ஆம்புலன்ஸ்ல் மருத்துவமனைக்கு செல்லும் வழியில்தான் கிராமிய காவல் நிலையம் உள்ளது என்றால் சரிதான். அவ்வாறு சென்றபோது காவல் நிலையத்தில் இறங்கி புகார் எதுவும் கொடுக்கவில்லையா என்றால் நான் அந்த நிலையில் இல்லை முதலில் மருத்துவமனைக்கு செல்ல வேண்டும் என்று மருத்துவமனைக்கு போனேன். போலீசார் என்னை விசாரித்தபோது எதிரிகளின் பெயர், ஊர் தெரியாது என்றுதான் சொன்னேன் என்றால்

எதிரிகளை முன்ன பின்ன பார்த்தது இல்லை முதன்முதலாக சம்பவத்தின்போதுதான் பார்த்தேன். சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் சமயத்தில் வெளிச்சம் இருந்தது என்ற விவரத்தை போலீசாரிடம் சொன்னேனா என்றால் அது திறந்த வெளியில் வைக்கப்பட்டுள்ள கடை நீளமாக உள்ள கடை ஒரு லைட் மட்டும் எரிந்துக்கொண்டிருக்கும். சம்பவ சமயத்தில் என் கடையில் சிசிடிவி கேமரா இருந்ததா என்றால் இருந்தது ஆனால் அது அப்போது பழுதாகியிருந்தது. சிசிடிவி கேமரா பதிவாகியுள்ள விவரத்தை போலீசாரிடம் சொன்னேனா என்றால் சொன்னேன். டோல் பிளாசாவில் சிசிடிவி கேமரா இருந்ததா என்றால் இருந்தது.

போலீசார் என்னை விசாரித்து டைப் செய்துக்கொண்டார்களா என்றால் நான் சொல்ல சொல்ல எழுதினார்கள். இந்த வழக்கில் போலீசார் சாட்சிகளை அனைவரையும் காவல் நிலையத்தில் வைத்து தயார் செய்த அனைத்தும் ஆவணங்களிலும் நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் மருத்துவமனையில் சேர்ந்தபோது தெரியாத பத்து நபர்கள் கத்தியால் கிழித்ததாக சொன்னேன் என்றால் அப்படி இல்லை என்னை கத்தியால் குத்திவிட்டார்கள் என்றுதான் சொன்னேன். குத்தியது யார் என்று மருத்துவமனையில் கேட்டார்கள், அப்போது யார் என்று தெரியாது என்றும் அவர்கள் பெயர் தெரியாது என்று சொன்னேன்.

சா.பொ.1 கத்தியால் தர்பூசணி அல்லது பலாப்பழம் ஆகியவற்றை வெட்ட முடியாது என்றால் வெட்டலாம். 1ம் எதிரியின் அங்க அடையாளம் பற்றி போலீசாரிடம் சொன்னேனா என்றால் உயரமாகவும், தடியாகவும் இருப்பார் என்று சொன்னேன். அப்போது முடி வளர்த்திருந்தார் அந்த அடையாளத்தையும் சொன்னேன். மூன்று நபர்களின் பெயரை யார் சொன்னது என்றால் சம்பத்தை பார்த்தவர்கள் மறுநாள் சொன்னார்கள். அன்று இரவு கடை அருகில் எதிரிகள் கத்திக்கொண்டிருந்தபோது பார்த்தவர்கள் சொன்னார்கள். யார் யார் பார்க்க வந்தார்கள் என்ற விவரத்தை போலீசார் விசாரித்தபோது சொன்னேனா என்றால் சொல்லவில்லை.

கடைக்கு இரண்டு பக்கங்களிலும் நிரைய மரங்கள் இருந்தது என்றால் சரிதான். கடைக்கு பின்பக்கம் மலை உள்ளது என்றால் சரிதான். டோல்கேட் இரவு பகலாக இயங்கிக்கொண்டிருக்கும் என்றும் அங்கு பணியாளர்கள் இருப்பார்கள் என்றால் சரிதான். சம்பவம் நடந்தது டோல்கேட்டுக்கு அருகில் என்றால் டோல்கேட்டுக்கு கொஞ்சம் தூரம் தள்ளி நடந்தது. அக்கம் பக்கத்தில் இருந்த கடைகள் இரவு 11.00 மணிக்கு மூடிவிட்டு போய்விட்டார்கள் என்றால் பக்கம் கடை எதுவும் இல்லை என் கடை தனிக்கடை. பக்கத்தில் வீடு, எதிரில் வீடு மற்றும் ஓட்டல் உள்ளது. போலீசார் விசாரணையில் மாயி என்ற நபர் சம்பவ சமயத்தில் இருந்தார் என்று சொன்னேனா என்றால் சொன்னேன்.

சம்பவம் நடந்த உடன் அருகில் இருந்த கிராமிய காவல் நிலையத்தில் நான் எந்த புகாரும் கொடுக்கவில்லை என்றால் ஆம் புகார் கொடுக்கவில்லை.

கடை இருந்த இடத்தில் இரவு பகலாக வாகனங்கள் வந்து சென்றுக்கொண்டிருக்கும் என்றால் சரிதான். சம்பவத்தை நேரில் பார்த்தார்கள் என்ற விவரத்தை சொன்னேனா என்றால் கடையில் வேலை செய்தவர்களைத்தான் எனக்கு தெரியும். மற்றவர்கள் யார் பார்த்தார்கள் என்று கவனிக்கவில்லை. என்னை அடையாளம் தெரியாத பத்து நபர்கள் தாக்கிவிட்டார்கள் என்றும் 3 வருடங்கள் கழித்து எதிரிகள் மீது பொய்யாக அவர்கள்தான் தாக்கியதாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. அன்றைய தேதியில் போலீசார் எதிரிகளை அழைத்து கொண்டு வந்து இவர்கள்தான் வெட்டினார்களா என்று அடையாளம் காண்பிக்கவில்லை என்றால் ஆமாம்.

முதன்முதலில் என்னை போலீசார் விசாரித்தபோது என்னை வெட்டியது கோபி கார்த்திதான் என்று சொன்னேனா என்றால் ஆளை தெரியும், விசாரித்தபோது சொன்னேன். என்னை ஆபாச வார்த்தையால் பேசியதை பொதுமக்கள் பார்க்கவில்லை என்றால் பொதுமக்கள் பார்த்தார்களா இல்லையா என்று எனக்கு எப்படி தெரியும். எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றும்

என்னை அடையாளம் தெரியாத நபர்கள் தாக்கியதை பொய்யாக எதிரிகள் தாக்கியதாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. என் மீது இரண்டு, மூன்று குற்ற வழக்குகள் உள்ளது என்றால் அப்படி எதுவும் வழக்குகள் இல்லை. தற்போது கூட எதிரிகள் பெயர்கள் எனக்கு தெரியாது என்றால் தெரியாது. கோபி கார்த்தியின் பெயர் மட்டும் தெரியும். மருத்துவமனையில் நிரைய பேர் சொன்னார்கள். அவர் எந்த ஊரைச்சேர்ந்தவர் என்று தெரியாது. மற்ற இருவரும் எந்த ஊரை சேர்ந்தவர்கள் என்றும் என்ன தொழில் செய்கின்றார்கள் என்றும் தெரியாது.

**மறுவிசாரணை – இல்லை.**

ELAVARASAN Digitally signed by ELAVARASAN Date: 2026.02.13 16:39:17 +0530

# Deposition of Witness

In the Court of the Principal District Judge, Vellore District.
S.C.No. 89 of 2025
Prosecution Witness No.P.W.4 (L.W.3)

| | |
|---|---|
| Name | ஏழுமலை |
| Father/Husband Name | கோவிந்தசாமி |
| Calling/Occupation | கூலி |
| Age | 56 |
| Address | எடுமண்டி. |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 13.02.2026.

(A1 to A3 Present)

**முதல் விசாரணை**

நான் எடுமண்டி கிராமம், திருவண்ணாமலையில் வசித்து வருகிறேன். அ.சா.3 செல்வகுமாரை தெரியும். அவர் கண்ணமங்கலம் டோல்கேட் அருகில் பழக்கடை வைத்திருந்தார். அவரிடம் நான் வேலை செய்தேன். ஆஜர் எதிரிகளை தெரியும். கடந்த 25.05.2023 அன்று மாலை 07.00 மணிக்கு ஆஜர் எதிரிகள் மது அருந்திவிட்டு வந்து கலாட்டா செய்துக்கொண்டிருந்தார்கள்.

நான், செல்வகுமார் மற்றும் குமரன் போய் கேட்டோம். எங்களை அவர்கள் தரக்குறைவாக பேசிவிட்டு போய் வந்து பார்த்துக்கொள்கிறோம் என்று சொல்லிவிட்டு போய்விட்டார்கள். பின்னர் எதிரிகள் மூவரும் இரவு 02.45 மணிக்கு பழக்கடையிடம் வந்து எதிரிகள் பேசினார்கள். நாங்களும் பேசினோம். அப்போது குமரனை ஆஜர் 1ம் எதிரி கத்தியால் தலையில் குத்திவிட்டார். செல்வகுமார் சென்று கேட்டபோது அவரை இடது மார்பு, வலது மார்பு, தோள்பட்டை ஆகிய இடங்களில் குத்தினார். பின்னர் எதிரிகள் ஓடிவிட்டார்கள். பின்னர் ஆம்புலன்ஸ் வரவழைத்து அடுக்கம்பாறை அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றார்கள். நான் கடையில் இருந்தேன். போலீசார் என்னை விசாரித்தார்கள். எதிரிகள் சம்வத்தின்போது பயன்படுத்திய கத்தி என்னிடம காண்பிக்கப்படும் சா.பொ. 1 ஆகும்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் பழக்கடையை விட்டு எங்கும் போகவில்லை என்றால் போகவில்லை. போலீசார் பழக்கடையிடம் எத்தனை மணிக்கு வந்தார்கள் என்றால் சம்பவம் முடிந்த பின்னர் வந்தார்கள். நேரம் சரியாக தெரியவில்லை. காலையில் வந்து போயிருப்பார்கள் எனக்கு தெரியாது நான் வீட்டிற்கு போய்விட்டேன். எத்தனை நாட்கள் கழித்து

போலீசார் என்னை விசாரித்தனர் என்றால் கவனம் இல்லை. எங்கு வைத்து என்னை போலீசார் விசாரித்தார்கள் என்றால் பழக்கடையில் வைத்து விசாரித்தனர்.

என்னை பழக்கடையில் வைத்து விசாரிக்கவில்லை என்றும் காவல் நிலையத்தில் வைத்துதான் விசாரித்தனர் என்றும் நான் உண்மைக்கு மாறாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. போலீசார் என்னை விசாரித்து என் பெயர், ஊர், விலாசம் ஆகியவற்றை பேப்பரில் எழுதிக்கொண்டு போனார்கள் என்றால் ஆமாம். போலிசார் என்னை விசாரித்தபோது கடையில் கீழே கிடந்த கத்தியை எடுத்துக்கொண்டு போனார்கள் என்றால் ஆமாம். எதிரிகளின் பெயர், ஊர், விலாசம் எதுவும் தெரியாது என்றால் சரிதான். நான் கடைக்குள் தூங்கிக்கொண்டிருந்தேன் என்றும், வெளியில் வந்து பார்த்தபோது சண்டை முடிந்து அவர்கள் போய்விட்டார்கள் என்றால் நான் வெளியில் வந்து பார்த்தபோது அவர்கள் சண்டை போட்டார்கள் அதன் பின்னர்தான் போனார்கள். கடைக்கு எதிரிலும் பின்புறமும் இரு பக்கங்களிலும் மரங்கள் நிரைய இருந்தது என்றால் சரிதான். மரத்தின் நிழலினால் பாதி இடம் இருட்டாகத்தான் தெரியும் என்றால் டியூப் லைட் எரிந்துக்கொண்டிருந்தது. சம்பவத்தின்போது எதிரிகள் என்ன நிற உடை அணிந்திருந்தார்கள் என்றால் அதை நான் கவனிக்கவில்லை. சம்பவத்தின்போது பத்து பேர் கும்பலாக வந்து

சண்டை போட்டார்கள் என்றால் ஆஜர் மூன்று எதிரிகளைத்தான் பார்த்தேன். சம்பவ நேரத்தில் எங்கள் கடையில் சுமார் 10 பேர் இருந்தோம் என்றால் அவ்வளவு பேர் இல்லை. எங்கள் கடையில் சிசிடிவி கேமரா இருந்ததா என்றால் இருந்தது. அந்த கேமரா இயங்கிக்கொண்டிருந்தது என்றால் அதை நான் பார்த்தது இல்லை. சிசிடிவி கேமராவின் பதிவுகள் கடையின் உரிமையாளர் வீட்டில்தான் இருந்தது என்றால் அது எல்லாம் எனக்கு தெரியாது. யாரோ கடையை அடித்து உடைத்து தாக்கிவிட்டு சென்றார்கள் என்றும் எதிரிகள் தாக்கியதாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. காவல் நிலைய போன் நம்பர் கடையில் எழுதி வைத்திருந்தோம் என்றால் இல்லை.

**மறுவிசாரணை – இல்லை.**

ELAVARASAN Digitally signed by ELAVARASAN Date: 2026.02.13 16:39:26 +0530

# Deposition of Witness

In the Court of the Principal District Judge, Vellore District.
S.C.No. 89 of 2025
Prosecution Witness No.P.W.5 (L.W.5)

| | |
|---|---|
| Name | மாயகிருஷ்ணன் |
| Father/Husband Name | கோபால் |
| Calling/Occupation | கூலி |
| Age | 59 |
| Address | சந்தனக்கொட்டாய் |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 13.02.2026.

(A1 to A3 Present)

**முதல் விசாரணை**

நான் சந்தனக்கொட்டாய் கிராமத்தில் வசிக்கிறேன். கடந்த 26.05.2023 அன்று காலை 10.00 மணிக்கு ராகவேந்திரா பழக்கடைக்கு போலீசார் வந்தார்கள். வந்து இடத்தை பார்த்து விசாரித்து எழுதிக்கொண்டார்கள். அதில் யூசூப் என்பவரும் நானும் சாட்சி கையொப்பம் போட்டோம். அந்த இடத்தை பார்த்து படம் வரைந்தார்கள். பார்வை மகசரில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். அந்த பார்வை மகசர் அ.த.சா.ஆ.4 ஆகும். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

எனக்கு எழுதப்படிக்க தெரியாது கையொப்பம் மட்டும் போட தெரியும் என்றால் ஆமாம். நான் கையொப்பம் செய்த வெள்ளை தாளில் 1, 2 என எழுதி இரண்டாவது என்ற இடத்தில் என்னுடைய கையொப்பம் வாங்கினார்கள் என்றால் சரிதான். போலீசார் சம்மன் கொடுத்தபோதுதான் இந்த வழக்கில் நான் சாடசியமாக இருக்கிறேன் என்ற விஷயம் தெரியும் என்றால் சரிதான்.

**மறுவிசாரணை – இல்லை.**

ELAVARASAN Digitally signed by ELAVARASAN Date: 2026.02.13 16:39:32 +0530